அரணா மீரா ராதாக்ருஷ்ணா

தமிழில் மீராபாய் கீர்த்தனைகள்

முன்னுரை

வாழ்வில் எது நிஜம் எது நிழல் என்று புரியாது குழம்பி நிற்கையில், உலகில் எல்லோரும் ஆண் என்றும் பெண் என்றும் பாகுபாடு செய்து வாழ்ந்து வருகையில், தங்களைப் பெண்ணாய் உருவகித்து, திருமாலை ஆணாய் உருவகித்து ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் நாமறிவோம். கண்ணனைத் தோழனாய், குழந்தையாய், நண்பனாய், காதலனாய் பாடிய பாரதியும் அறிவோம்.
கண்ணனை, அவனே நிஜமென்று அவனையே காதலித்து , அவனைக் கார்மேனி வண்ணனாய், கண்கவர் காதலனாய்க் கண்ட அந்த மீராவின் பக்தி மிக உன்னதமானது.

என்ன தவம் செய்தேனோ இப்பிறவியில் பிருந்தாவன மண்ணில் கால் வைத்தேன். கால் வைத்த பிருந்தாவனத்தில், கரம் தொட்டு, கிட்டாண்ணாவின் மூலம் அந்த கோவர்த்தன கிரிதாரி என்னுடன் வந்தான்,

அந்த கிரிதாரியும்  அவனோடு வந்த அழகிய மீராவும்  என்னை இங்கு பாடவைக்கிறார்கள்.

கிருஷ்ணனின் கிருபையாலும், முன்னோர் அருளாலும், குருநாதர் வாக்காலும் அந்த கண்ணனையே காலமெல்லாம் நினைத்து வழிபட்டு உருகிய மீராபாய் கீர்த்தனைகள் சிலவற்றை தமிழாக்கம் செய்ய முயற்சிக்கிறேன். என் தாய் வழி பாட்டன் திரு. சங்கு சுப்ரமணியன் ( சங்கண்ணா) பஜனை வட்டாரத்தில் தமிழ் முழக்கம் செய்தவர். கீத கோவிந்தத்தை தமிழாக்கம் செய்து,  "ஜீவ ஈஸ்வர  ஐக்கியம்" என்று புரியாது பேசப்படும் அத்வைத வேதாந்தத்தை ராசத்தில் சிருங்காரமாய் எளிதில் புரிய வைத்தவர். சங்கண்ணாவும், மீராவால் ஆட்கொள்ளப்பட்ட அரணா பிரபுவும் என்னை அனுதினம் காக்க இந்த மீரா பாடல்கள் எளிய தமிழில் அருவியாய் பெருக்கெடுத்து ஓடும் என்பதில் ஐயமில்லை.

மீராபாய் கீர்த்தனைகள் 15-16 ஆம் நூற்றாண்டில் பாடப்பட்டவை. தற்போது பல பாடல்கள் கிடைக்கவில்லை. காலப்போக்கில் பல பாடல்கள் அவள் பாடியதாகவும் இணைக்கப்பட்டன. இதில் எது நிஜம் எது பொய் யாரறிவார்?

எல்லாமே மாயையெனில் கிரிதாரியே நிஜமெனில் ஆராய்ச்சி எதற்கு?

இணையத்தில் தேடியபோது Mystic Songs of Meera  என்ற புத்தகம் கண்டேன். V. K . சுப்ரமணியன் என்பவர் ஹிந்தி அறியாத எனக்காகவே மீராவின் 101 பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த புத்தகம் . அதனை அடிப்படையாக கொண்டு என் கற்பனை குதிரையைத் தட்டிவிட்டு அந்த கிரிதாரியின் புல்லாங்குழல் கேட்க இதோ முயல்கிறேன் .

பாடலின் இறுதியில் 'மீரா கே பிரபு' என்று தன்  பாடல்களில் அவள் முத்திரையை பதித்தாள் . என் கற்பனைப் பாடல் என்பதால் என் தாய் என்னை ஆசையுடன் அழைத்த என் இல்லப்பெயர் பிரபாவை உபயோகித்து பிரபாவின் பிரபுவை அழைத்து என் பாடல்களை முடிக்கிறேன்.

கிரிதாரி கிரிதாரி மீரா பிரபு கிரிதாரி !
கிரிதாரி கிரிதாரி மீரா பிரபு கிரிதாரி!

மீராபாய் கீர்த்தனைகள் -1

உன் காரணமாக உலகசுகம் விட்டேனே
என்னைக் காக்க வைப்பது ஏனோ

பிரிவென்ற விரகம் பிறக்க வைத்ததேனோ
ஹரி நீ வந்தெனை அணைப்பதற்கோ

(உன்)

கண்ணா உன்னனைக் கைவிடுவேனோ என்
மன்னா என்னை அழைப்பாய் உடனே

(உன்)

மீரா உந்தன் அடிமை எப்பிறவியிலும்
ஆரத்தழுவி அங்கமணைப்பாயே

(உன்)

(உன் பிரபா உன்னைத் தழுவிடவே
பிறவியின் துன்பத்தை ஒழிப்பாயே (உன் )

மூலம்

**tumhare karan sab sukh chhoda, ab mohe kyu tarsaav ho**

**birah beeta laage ud antar, birah beeta laage ud antar**
**so tum aaye bujhaaw ho (tum)**

**ab chhodat nahi bane prbhu ji, ab chhodat nahi bane prbhu ji**
**hans kar torat bolaav ho**
**(tum)**

**meera basi janam janam ki, meera basi janam janam ki**
**ang se ang lagaav ho**
**(tum)**

**இசை வடிவில் கேட்க**

https://www.youtube.com/watch?time_continue=1&v=yi_ouyy7TXU

மீராபாய் கீர்த்தனைகள் -2

கோவிந்தனை என்னுடன் கூட்டியே  வந்தேனே
பேரமும்பேசி அன்னையே போற்றியே பெற்றேனே

மலிவென்று சிலரும் மகத்தென்று சிலரும்
கலியிலே கூறவே கருத்தில் எடைபோட்டேனே

கருநிறம் என்பாரே வெண்ணிறம் என்பாரே
கருத்தினில் நிறைந்தால் ஒரு நிறம் இல்லையே

இல்லத்தில் இருப்பானே இல்லாது மறைவானே
உள்ளபடி காட்டிலே உல்லாசமாய் திரிவானே

ராதை உடனே இராசத்தில் இருப்பானே
பாதை காட்டியே பாவையுடன் வருவானே

மீராவின் கிரிதாரி மெதுவே வந்திட
ஈரமாய் அன்பும் இதமாய் ஆடுமே

(பிரபாவின் கிரிதாரி அமெரிக்கா வந்திட
பிறந்தபேறும் பெற்று மகிழ்வேனே)

(கோவிந்தனை)

மூலம்

Mai ni maine govind lino mol
koi kahe mehengo koi kahe sasto
liyo ri taraju tol
koi kahe kalo koi kahe goro
liyo ri amolak mol
koi kahe ghar mein koi kahe ban mein
radha ke sang kilore
meera ke prabhu giridhar naagar
aavat prem ke mol

இசை வடிவில் கேட்க
https://www.youtube.com/watch?v=HUdBrGm9ZCs

3. மீராபாய் கீர்த்தனைகள் -3

சியாமனின் ஸ்மரணம்
சியாமனே உடலே சியாமனே உள்ளமே
சியாமனே செல்வமே நமக்கே என்றுமே

எட்டுஜாம நேரமும் இனிதான சியாமனே
மட்டில்லா அவனே மனதினிலே நிற்பானே

சியாமனே இதயமே சியாமனே உயிரே
சியாமனை விடவே யாரும் சிநேகமில்லையே

அந்தகன் நடந்துவிட அருளும் தடியே
பந்தமாய் காத்திடும் சியாமனின் நாமமே

சியாமனே செயலே சியாமனே காரணமே
சியாமனே என்னுள் சிலிர்க்கும் காதலனே

சியாமனே சுகமே சியாமனே நலமே
சியாமனின் எண்ணமே சிந்தையில் என்றுமே

உத்தவனே நீதரும் ஞானமே யோகமே
சித்தமே வேண்டாதே சியாமனே நிறைவானே

அணுஅணு அனைத்திலும் சியாமனே நிற்பானே
சியாமனே சியாமனே சியாமனே சியாமனே

மூலம்

Shyama thana shyma mana

Shyama hi hamaro dhana

Aato yama udho hame shyam hi so kaam hai

Shyama hiye shyama jiya shyama bina naahi piya

Andhe ki si laakadi adaar shyma naam hai

Shyama gathi shyama mathi shyama hai pranapathi

Shyama suka dhama so balayi aato yama hai

Udho thume badhe baare paathi le ke aayo dhode

Yog kahan rake yahan rom rom shyam hai

4. மீராபாய் கீர்த்தனைகள் 4

ஷியாம் சுந்தர பர்வார்

கருநீல அழகனுக்கு காணிக்கை தந்தேன்
காதலுடன் என் வாழ்வை காலடியில் தந்தேன்

உன்னால் நான் எல்லாம் விட்டேன்
என் குடும்பத் தடைகளைத் தாண்டினேன்

உன்னைக் காணாது நானும் துடித்தேன்
கண்ணீர் ஆறாய் பெருகி நின்றேன்

என்னருமை நாயகனே
யாரிடம் போய் சொல்வேன் ?
எங்கே நான் செல்வேன் ?

பிரிவின் துயரம் பெரிதாய் இருக்குதே
சிறிய பாதங்களை இந்த மீராவுக்குத் தருவாய் நீயே!

(பிரபாவின் அன்பு காதலனே
பிரியமாய் இங்கு வருவாயே)

மூலம்

Shyam sundar par vaar
jeevado maim vaar daaroongee haam
tere kaaran jog dhaarana lok laajkul daar
tum dekhyam bin kal na padat hai nain chalat doun baar
kahaa karoon kit jaanon moree sajnee kathiri hirah kee dhaar
meera kahai prabhu kab ra miloge tum charanaa aadhar

https://www.youtube.com/watch?v=ZvupIaiqoMs

5. மீராபாய் கீர்த்தனைகள் -5

## ஹரி குணம் பாடி நான் ஆடுவேனே

ஹரி குணம் பாடி நான் ஆடுவேனே
பிரபு குணம் பாடி நான் ஆடுவேனே

என் மனக் கோவிலில் இருப்பேனே
நான் கீதை, பாகவதம்  படிப்பேனே

ஞானமும் தியானமும் இணைந்தபடி
ஆனந்த ஹரியுடன் ஆடுவேனே

மீராவின் கிரிதர கிருஷ்ணாவே
ஆறாத காதலை எப்போதும் அனுபவிப்பேனே

(பிரபாவின் கிரிதர கோபாலனே
ப்ரேமையின் அழகு ஸ்வரூபமே)

மூலம்

Harigun gavat naachoongee
prabugun gavat naachoongee
apne mandir mon baith baithkar
geeta bhagavat baachoongee
jnan dhyan ki gathadi bandhkar
hari har sang main lagoongee
meera kahe prabhu giridhar nagar
sada premras chaakhoongee

https://www.youtube.com/watch?v=N6_QwGIqXBk

6.மீராபாய் கீர்த்தனைகள்-6

எழுந்திரு அன்பே  எழுந்திரு அன்பே

எழுந்திரு அன்பே  எழுந்திரு அன்பே
கையில் குழலுடன் காதலனே எழுந்திரு

இரவும் முடிந்ததே விடியலும் வந்ததே
கதவும் திறந்ததே வீடுகள் விழித்தனவே

கோபியர் கைவளை குலுங்க தயிர் கடைய
காலைப் பொழுது வந்ததே காளையனே எழுந்திரு

வாசலில் தேவதைகள் வந்து காத்திருக்க
ஆசையுடன் யாதவர் கையிலே கொண்டாரே

வெண்ணைப் பண்டம் உனக்காக தருவாரே
மண்ணிலே பசுவைக் காக்கும் பாலகனே

மீராவின் காதலனே உன்னையே நாடி வந்தேன்
என்னையும் காப்பாயே அடைக்கலம் தருவாயே

(பிரபாவின் பிரபுவே பிரம்மாண்ட அழகே
மீராவைக் காத்தது போல் என்னையும் காப்பாயே )

மூலம்

Jago bansivare lalana jaago mere pyare
rajani beeti bhor bhayo hai ghar ghar khule kivaare
gopi dahi mathat suniyat hai kankana ke jhankaar
utho laljee bhor bhayo hai sur nar thade dware
gvaal baal sab karat kulahal jay jay sabd ucchaare
makhan roti hath men leenee gauvan ke rakhvaare
meera ke prabhu giridhar naagar saran aaye ko taare

https://www.youtube.com/watch?v=0POCfxKeYpw

7. மீராபாய் கீர்த்தனைகள்-7
உன் பணியாளாய் வைத்துக் கொள்

உன் பணியாளாய் வைத்துக் கொள்
என்னை உன் பணியாளாய் வைத்துக் கொள்

உன்  பணியாளாய் நானும் இருப்பேனே
உன் தோட்டத்தில் செடிகளை நடுவேனே
என்னை உன் பணியாளாய் வைத்துக் கொள்

தினமும் காலை எழுந்து காண்பேனே
மனமும் மகிழ உன் முகத்தில் விழிப்பேனே
என்னை உன் பணியாளாய் வைத்துக் கொள்

பிருந்தாவன நந்தவனத்தில் பாடுவேனே
கருத்திலே உன்னைக் கொண்டு உன்புகழ் பாடுவேனே
என்னை உன் பணியாளாய் வைத்துக் கொள்

மஞ்சள் வண்ண உடையில் நீல மயில் பீலியில்
நெஞ்சை அள்ளும் வைஜயந்தி மாலையில்
கொஞ்சும் குழலோசையில் கோபாலன் அழகில்
என்னை உன் பணியாளாய் வைத்துக் கொள்

யோகிகள் வந்து செய்யும் யோகத்தில்
முனிவர்கள் வந்து செய்யும் தவத்தில்
பிருந்தாவன வ்ரஜவாசிகள் பாடும் ஹரி பாடலில்
என்னை உன் பணியாளாய் வைத்துக் கொள்

மீராவின் கிரிதாரி மெத்தன அழகே
வாடாதே மனமே வருவான் அவனே
நள்ளிரவில் யமுனைக் கரையில் வருவான் அவனே
என்னை உன் பணியாளாய் வைத்துக் கொள்

(பிரபாவின் கிரிதாரி பிரமாத அழகே
அரவணைக்க அவனும் வருவான் அந்தியிலே
பனியிலும் வருவான் பாடியாடி வருவான்
என்னை உன் பணியாளாய் வைத்துக் கொள்)

மூலம்

Chakar rakho ji
Mane chakar rakho ji
Chakar rakho ji
Mane chakar rakho ji
Chakar rahsu bag laga su
Nit nit darshan paa su
Vrindawan ki kunj gali mein
Teri leela dasu
Mane chakar rakho ji
Mor mukut pitambar sohe
Gale vaijanti mala
Varidawan mein dhen charave
Mohan murli wala
Mane chakar rakho ji
Chakar rakho chakar rakho
Jogi aaya jog karan ko
Tap karne sanyasi
Hari bhajan ko sadhu aaya
Virndawan ke vasi
Mane chakar rakho ji
Chakar rakho ji
Meera ke prabhu gahir gambira
Rahte raho jira
Aadhi rath prabhu dharshano dedo
Yamuna ji ke dheera
Mane chakar rakho ji
Chakar rakho chakar rakho
Chakar rakho ji
Mane chakar rakho ji.

https://www.youtube.com/watch?v=19h9mJkCU-A

8. மீராபாய் கீர்த்தனைகள்-8

நீ துக்கங்களை அறவே களைவாயே

நீ துக்கங்களை அறவே களைவாயே
நீ துக்கங்களை அறவே களைவாயே

அன்று அழகாய் சேலைகள் தந்தாயே
நின்று திரௌபதி மானம் காத்தாயே

பக்தனைக் காக்க உருமாறி வந்தாயே
தக்க தருணத்தில் நரஹரியாய்  வந்தாயே

நரசிம்ம கோலத்தில் நரனை அழித்தாயே
வரங்கள் வாங்கியவனை வாகாய் பிளந்தாயே

ஆதி மூலமாய் முதலை வாயிலிருந்து காத்தாயே
ஜோதியாய் கஜேந்திரனுக்கு சுகம் அளித்தாயே

ஓ மீராவின் கிரிதாரி
துக்கம் என்னை சூழ்ந்திருக்க காக்க வைப்பாயோ
வருவாயே  வருவாயே என்னை விடுவிப்பாயே

(ஓ பிரபாவின் கிரிதாரி
தினமும் துக்கம் செய்தியாய் தாக்குகிறதே
வருவாயே வருவாயே  என்னை விடுவிப்பாயே )

மூலம்

hari tum haro jana kī pīr

(1)
draupadī kī lāj rākhī
tum baḍhāyo cīr

(2)
bhakta kārana rūpa narahari
dharyo āp śarīr

(3)
hiraṇyakaśyapa mār līnho
dharyo nāṅhina dhīr

(4)
būḍate gaja rāja rākhyo
kiyo bāhar nīr

(5)
dāsī mīrā lāl giradhari
duḥkha jahāṅ tahāṅ pīr

9.**மீராபாய் கீர்த்தனைகள்**-9

காலில் கொலுசுடன் ஆடுவேனே மீரா ஆடுவேனே

தாளில் பணிந்த பணியாளாய் ஆனேனே  என் நாராயணன்

தாளில் பணிந்த பணியாளாய் ஆனேனே

இராணா அனுப்பிய விஷமும் குடித்தேனே

தானாக சிரித்தபடி குடித்தேனே நானும்

தானாக சிரித்தபடி குடித்தேனே

உலகம் முட்டாளென சொல்லுமே

சுலபத்தில் ஏளனம் செய்யுமே

சுலபத்தில் ஏளனம் செய்யுமே

கலகம் செய்து குடும்பம் அழிப்பாளென்று

உலகில் சொல்லும்  உறவுகளே

உலகில்  சொல்லும்  உறவுகளே

மீரா கொண்டேன் அழியா உறவே

கோவர்த்தன கிரிதாரியுடன்

மீரா கொண்டேன் அழியா உறவே

(சுலபத்தில் என்னையும் ஏளனம் செய்வாரே
உலகில் பலரும் இளக்காரம் செய்வாரே
சுலபத்தில் என்னையும் ஏளனம் செய்வாரே

பிரபாவின் கிரிதாரி பேரின்பம் தருவானே

சிரம்தாழ எந்தன் சிந்தையில் நிறைவானே
பிரபாவின் கிரிதாரி பேரின்பம் தருவானே )

மூலம்

pag ghungaroo baandh meera nachi re nachi re

main to apne narayan ki  ho gayi ap hi dasi re

vish ka pyaala rana ji ne bheja

peevat meera haansi re

log kahein meera bhai baavari

naat kahe kul naasi re

meera ke prabhu ghirdhar naagar

sahaj mile avinasi re

https://youtu.be/gJS15a0oEUQ

(I wrote this in Jodhpur, Rajasthan. Meera lived near this place in Chittorghar and danced in front of Krishna in a temple in Chittorghar. )

10.மீராபாய் கீர்த்தனைகள் -10

என்னருமை கிரிதர கோபாலா
வேறு யாரும் இல்லை

சிகையில் மயிலிறகே சிங்கார அழகே
வகையாய் சங்கே வாகாய் சக்கரமே
பாங்காய் கதையே தாமரை மாலையே

என்னருமை கிரிதர கோபாலா
வேறு யாரும் இல்லை

அன்னை இல்லையே தந்தை இல்லையே
இன்னாரென சொந்தம் இல்லையே
உடன் பிறந்த சகோதரன் இல்லையே
உறவுகள் முறிந்து உன்னை நாடினேனே
யாரெனக்கு ஆதரவு தருவாரே

என்னருமை கிரிதர கோபாலா
வேறு யாரும் இல்லை

என் காதலை கண்ணீரில் சொன்னேனே
உன் காலடியில் மீரா சரணம் புகுந்தேனே

என்னவன் அவனே
என்னருமை கோபாலனே
வேறு யாரும் இல்லையே

(என் காதலை இப்பாடலில் சொன்னேனே
உன் காலடியில் பிரபா சரணம் புகுந்தேனே )

என்னவன் அவனே
என்னருமை கோபாலனே
வேறு யாரும் இல்லையே

மூலம்

Mere to giridhar gopal
dusro na koi

jake sir more mukut mero pati soi- prabhu
shank chakra gada padma kanth mala koi
tat mat bandhu bhrat apna na koi
chand dai kul ko kan ka karega he koi
asuvan jal sinci sinci prem bel boi
dasi mira prabhu lagan lagi ab mohin
mere to giridhar gopal
dusro na koi